பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 18 | செவ்வாய்க்கிழமை | 03.09.2024 | அதிர்வு 032

## வாக்காளர் அட்டைகள் இன்று முதல் வீடுகளுக்கு

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் இன்று முதல் வீடுகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

இதன்படி 25 மாவட்டங்களில் உள்ள தேர்தல் அலுவலகங்களினூடாக 05



# மஹிந்தவின் வழியிலேயே பயணிப்பேன்; ஒற்றையாட்சியைப் பாதுகாத்தே தீருவேன்

## தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடும் நிகழ்வில் நாமல் சபதம்





"மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளை நான் கடைப்பிடிப்பேன். நாட்டின் ஒற்றையாட்சியைப் பாதுகாத்தே தீருவேன்."

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். 06

# தமிழ்ப் பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று



(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்ப் பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் சார்பில் முன்னாள் எம்.பி. பா.அரியநேத்திரன் தமிழ்ப் பொது வேட்பாளராகக் களமிறக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர்கள் பலரும் தற்போது 05




ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசக் கிடைத்தது. ஏனைய சில பத்திரிகையாளர்களோடும் பின்னர் தனித்தும் அவருடன் உரையாடினேன்.

இடையில் யாழ்ப்பாணத்தில் கூட்ட மேடை ஒன்றிலிருந்த அவருக்கு நான்தான் ஒரு பிரேக்கிங் செய்தியைத் தொலைபேசி மூலம் சொன்னேன்.

"உங்களை ஆதரிக்கும் முடிவைச் சற்று முன்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு எடுத்து விட்டது. இன்னும் சற்று நேரத்தில் பத்திரிகையாளர் மாநாட்டில் அது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என நினைக்கிறேன்." – என்றேன் நான்.

"அப்படியா? மிக்க 06











# நாமலின் விஞ்ஞாபனம் வெளியீடு

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியின் வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ வின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடும் நிகழ்வு நேற்று கொழும்பு - ரத்னதீப நட்சத்திர ஹோட்டலில் இடம்பெற்றது.

தொடர்ச்சி▼



















# நாமலின் விஞ்ஞாபனம் வெளியீடு

தொடர்ச்சி▲







# சஜித்தை ஆதரிக்கும் தமிழரசின் தீர்மானத்தை ஏற்கவேமாட்டோம்!

## இலண்டனில் இருந்து சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு



“ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு மேற்கொண்ட தீர்மானத்தை ஏற்க முடியாது. இந்தத் தீர்மானத்துக்கான எதிர்வினை எதிர்வரும் நாட்களில் வெளிப்படுத்தப்படும்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

தற்போது இலண்டனில் தங்கி நிற்கும் அவர், கட்சியின் தீர்மானம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த காலங்களில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாகக் கருத்துக்களை வெளியிட்டு வந்த சிறீதரன் எம்.பி., இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று தெரிவித்தார்.

கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா மற்றும் மாவட்ட ரீதியாகக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளாத நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும், குறிப்பாக நல்லூர் தேர்த்திருவிழா தினத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ள நிலையில், அதனை ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.



# இன்றும் நாளையும் நாடாளுமன்றம் கூடும்

இன்றும் நாளையும் நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெறவுள்ளன.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று இடம்பெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுக் கூட்டத்தின்போது சபை அமர்வுகள் தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இன்று முற்பகல் வெளிநாட்டு வழக்குத் தீர்ப்பு அமுலாக்க சட்டமூலம், பதிவு செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் சட்டமூலம் உள்ளிட்ட மேலும் சில சட்டமூலங்கள் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதம் நடைபெறவுள்ளது.

# சட்டவிரோத பிரசார நடவடிக்கைகள் குறித்து அதிக முறைப்பாடுகள் பதிவு

## கபே அமைப்பு தகவல்

எவரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சுதந்திரமானதும் நீதியானதுமான மக்கள் அமைப்பான கபே தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கு இதுவரை 435 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றில் அதிகளவான முறைப்பாடுகள் சட்டவிரோத தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தொடர்பிலேயே பதிவாகியுள்ளன என்று கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கின் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின்போது கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காகக் கபே அமைப்பு, 25 மாவட்டங்களிலும் 25 மாவட்ட இணைப்பாளர்கள் மற்றும் 160 நீண்டகால கண்காணிப்பாளர்களைக் கடமைகளில் ஈடுபடுத்தியுள்ளது.

தேர்தல் பிரசார நிதியைக் கண்காணிப்பதற்காக 40 தேர்தல் தொகுதிகளில் 40 நீண்டகால கண்காணிப்பாளர்களை நிறுவி தேர்தல் பிரசாரத்துக்காக ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் அமைச்சர்களும் செலவு செய்கின்ற செலவு தொடர்பிலான கண்காணிப்பை கபே அமைப்பு முன்னெடுத்து வருகின்றது.

அத்துடன், தேர்தல் தினத்தன்று கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்து 500 கண்காணிப்பாளர்கள் கடமைகளில் ஈடுபடுத்தவுள்ளனர் என்று கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கின் மேலும் குறிப்பிட்டுள்ளார்.




# டெங்கு நோய் பரவல் அதிகரிப்பு! தடுப்பு நடவடிக்கைகள் தீவிரம்!!

நாட்டில் கடந்த சில வாரங்களாகப் பெய்து வரும் தொடர் மழை காரணமாக டெங்கு பாதிப்பு அதிகரித்து வருகின்றது என்று சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

அதிக அபாயம் உள்ள 20 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் இனங்காணப்பட்டுள்ளன என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

மேற்படி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.









## கிளப் வசந்த கொலை:

# கைதான 12 பேருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

கிளப் வசந்த எனப்படும் சுரேந்ர வசந்த பெரேரா உள்ளிட்ட இருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதான மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அமல் சில்வா உள்ளிட்ட 12 பேர் மீண்டும் விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் நேற்று கடுவலை நீதிவான் நீதிமன்றத் தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது அவர்களை எதிர்வரும் 13ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தர விட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கடந்த 29 ஆம் திகதி மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அமல் சில்வா கைது செய் யப்பட்டார்.

கடந்த ஜூலை மாதம் 8 ஆம் திகதி அத்துருகிரிய பகுதி யில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் கிளப் வசந்த உள்ளிட்ட இருவர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டார் சிரேஷ்ட விரிவுரையாளர் ஸ்ரீகணேசன்!



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் பேராசிரி யராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

கலைப்பீடத்தின் ஆங்கில மொழி கற்பித்தல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கே.ஸ்ரீகணேசன் பேரா சிரியராகப் பதவி உயர்த்துவதற்குப் பல் கலைக்கழகப் பேரவை கடந்த சனிக் கிழமை ஒப்புதல் வழங்கியது.

யாழ். பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் கடந்த 30 ஆம் திகதி சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரி யர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங் களுக்குஅமையத்திறமைஅடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த ஆங்கில மொழி கற்பித்தல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலா நிதி கே.ஸ்ரீகணேசனின் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் அன்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட் டன.

அவற்றின் அடிப்படையில், ஆங்கில மொழி கற்பித்தல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே.ஸ்ரீகணேசன் ஆங்கில மொழி கற்பித்தலில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

## வாக்காளர் அட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாக்காளர் அட்டைகளை அஞ்சலிடக் கையளிப்பதற்கான நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தேர்தல் கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை வீடுகளுக்கு விநியோகிக்கப்படும் என்று அஞ்சல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்கான விசேட தின மாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்காகச் சுமார் 8 ஆயிரம் பேரைக் கடமைகளில் ஈடுபடுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று சிரேஷ்ட பிரதி அஞ்சல்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித் துள்ளார்.

## தமிழ்ப் பொது வேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வரு கின்ற நிலையில் தமிழ்ப் பொது வேட்பாளரின் விஞ்ஞாபன மும் இன்று யாழ்ப்பாணத்தில் வெளியிடப்படவுள்ளது.

இந்த விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களின் இனப் பிரச்சி னைக்கு தீர்வு உட்பட தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை கள், தேவைகள் பலவும் உள்ளடக்கப்பட்டு இருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இந்தத் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் சிவில் சமூகப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.”

– என்றார்.

## இரகசியம் பரகசியம்

மகிழ்ச்சி!" – என்று மகிழ்ந்து போன அவர் "எதற்கும் ஒரு தடவை குறொஸ் செக் பண்ணி உறுதி செய்ய முடியுமா?" – என்று உரிமையோடு கோரினார்.

"என் தகவல் வட்டாரங்கள் மிக நம்பக மானவை. இன்னும் சற்று நேரத்தில் ஊடகங்களில் பிரேக்கிங் நியூஸ் வரும். செய்தி உங்களுக்கு உறுதியாகும்" – என்றேன் நான்.

முன்னதாக அவருடன் பேசிக் கொண் டிருந்த போது அரசியல் விடயங்களுக்கு அப்பால் இரண்டு வினாக்களை நேரடி யாக அவரிடம் கேட்டேன். அவருக்கு மூக்கு முனை வரை கோபம் வந்தது. எனி னும் தன்னைச் சற்று அடக்கிக் கொண்டு கௌரவமாகப் பதில் தந்தார். ஒரு மூத்த பத்திரிகையாளன் என்று என்னைப் பலரும் கருதும் நிலையில் அப்படியான கேள்வியை Blunt ஆக நான் அவரிடம் நேரடியாக கேட்டது நியாயமோ தெரிய வில்லை. தமது பதிலின் இடையே அவை முட்டாள்தனமான கேள்விகள் என்று அவர் சொல்லாலும் குறிப்பாலும் உணர்த்தத் தவறவில்லை.

"நீங்கள் தமிழர்களுக்கு நியாயம் செய்வேன் என்று திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறுகின்றீர்கள். ஆனால் உங்களின் தந்தையார் அரசியலில் – அதி காரத்தில் – உச்சத்துக்கு வந்த சமயத் தில் பக்கத்தில் இருந்த தமிழர் ஒருவரே குண்டுத்தாக்குதல்நடத்திஅவரைக்கொன் றார். அந்த கோபம் தமிழர்கள் மீது உங் களுக்கு இயல்பாகவே இருக்காதா? அத்– தகைய தமிழர்களுக்கு நீங்கள் நியா யம் செய்வீர்களா என்ற சந்தேகம் தமி ழர்கள் மத்தியில் மேலோட்டமாக இருக்கின் றதே...!" – என்ற சாரப்பட என் கேள்வி அமைந்தது.

"முட்டாள்தனமான கேள்வி. ஒரு தமிழர் இழைத்த குற்றத்திற்காக முழு தமிழினம் மீதும் காழ்ப்புணர்வு கொள் ளும் அளவுக்கு விவேகம் அற்ற மனி தன் என்றா என்னை நினைத்துக் கொண் டீர்கள்? என் தந்தையார் மீண்டு வந் தால் கூட தமிழர்கள் மீது காழ்ப்புணர்வு கொள்ளவே மாட்டார். அவர் அரசியலில் மேலெழுந்து வருவதற்கு அவருக்குப் பக்கத்துணையாக இருந்தவர்கள் பஞ்ச லிங்கங்களான ஐந்து சிரேஷ்ட தமிழ் அதிகாரிகள் என்றுதான் பலரும் கூறு வர். கொழும்பில் தமிழர்கள் மற்றும் முஸ் லிம்களின் ஏகோபித்த ஆதரவில் தனிப் பெரும் தலைவராக உயர்ந்தவர் எனது தந்தையார். நீங்கள் கேட்கும் கேள்வி யின் சாயலில் ஒரு சந்தேக எண்ணம் கூட எனக்கு என் மனதில் இல்லை. என் தந்தையை விட தமிழர்களின் நெஞ் சத்தை அதிகம் வெல்ல வேண்டும் என்பது தான் எனது இலக்கு. எனது இந்தத் தேர் தல் வெற்றியின் பின் அந்தப் பெருமி தத்தை நீங்கள் ஒவ்வொருவரும் உணரச் செய்வேன். நான் உண்மையான பௌத் தன். புத்தர் கூறிய உண்மையான அன்பை – நேசிப்பை – அரவணைப்பை – நான்தமிழர்கள் தொடர்பில்நிறைவேற்றிக் காட்டுவேன்...!" – என்று உறுதிப்படக் கூறி னார் அவர்.

அந்தக் கருத்தை அவர் வெளியிட்ட போது அவர் முகத்தில் செய்து காட்டு வேன் என்ற அதீத உறுதி தெரிந்தது. தமது தந்தையாரின் மரணத்திற்கு தமி ழினம் மீது வஞ்சக எண்ணம் அவரிடம் கிஞ்சித்தும் கிடையாது என்பதை அந்தத் தெளிவான பதிலும், என் கேள்வி மீதான அவரின் கோபமும் வெளிப்படுத்தி நின் றன.

புறப்படும் சமயம் எழுந்து நின்று பேசிக் கொண்டிருந்தோம். மிகவும் நட் புணர்வோடு – அந்நியோன்னியமாக – பகிடி விட்டுச் சிரித்தார். எங்களையும் சிரிக்கப் பண்ணினார். அதைச் சந்தர்ப் பமாக வைத்து நான் ஒரு கேள்வி கேட் டேன்.

"உங்களைப் போல பல தலைவர் களை சந்தித்து விட்டேன். ஜனாதிபதி வேட்பாளராக இருக்கும்போது உங்க ளுடன் நெருங்கிப் பழக முடிகின்றது. நீங்களும் உங்களுடன் நெருக்கமான வராக எங்களை – பத்திரிகையாளர்களை – அழைத்து, அரவணைத்து உரை யாடுகின்றீர்கள். நாளைக்கு நீங்கள் ஜனாதிபதியானால் நாங்கள் இப்படி உங்களுடன் பழக முடியுமா? அவ்வளவு தூரம் இறங்கி வந்து ஊடாடுவீர்களா?" – என்றேன் நான்.

"உங்களுக்கு என் தந்தையை நன்கு தெரியும். அவருடன் பழகி இருக்கிறீர் கள். நானும் அவர் போலவே அப்படியே நடப்பேன்" – என்றவர், இக்கேள்விக்குத் தனது உணர்வை எப்படிப் பதிலாக வெளிப் படுத்துவது என்று ஒரு கணம் நினைத் தார். சடார் என தம் காலில் அணிந்திருந்த செருப்புகளை கழற்றிக் காட்டினார். "இது சாதாரண தோல் செருப்பு. இதே ரகத் தில் – இதே போன்ற – செருப்பைத்தான் என் தந்தையார் எப்போதும் அணிவார். நானும் அதையே அணிகிறேன். அமைச் சராக இருந்த போதும், கட்சித் தலை வரான போதும், எதிர்க்கட்சி தலைவ ராக இருக்கின்ற போதும் அதையே அணிகிறேன. நாளை ஜனாதிபதியா னாலும் அதையே அணிவேன். அந்தப் பதவி என்னை – என் பண்பியல்பை – மாற்றி விடாது. அதே பாணியில், அதே நெருக்கத்தில், உங்களுடன் பேசுவேன், பழகுவேன்" – என்றார் மிக உறுதியாக. பதவி வந்தாலும் தன்னில் மாற்றம் இருக்காது என்பதை மிக அழுத்தமாக உறுதிப்படுத்திக் கூற அவர் முயன்றார் என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

கடைசியாக ஒரு கொசுறுத் தகவல்.

யாழ்ப்பாணத்தில் அங்கஜன் எம்.பி. இப்போது ரணிலுக்காக வேலை செய்கின் றார். அங்கஜனின் பழைய சகாக்களான அவரது சித்தப்பா ராஜனும் பிள்ளைக ளும் அங்கஜன் தரப்புடன் முரண்பட்டு நிற்கின்றமை ஊர் அறிந்த இரகசியம்.

யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த சஜித் பிரேமதாஸ நேற்று முன்தினம் இரவு ராஜனின் இல்லத்துக்கு போய் அவர் களைச் சந்தித்து பேசினார். சஜித்தின் அணியில் முக்கிய இடம் ராஜன் தரப்புக்கு வழங்கப்படலாம் என சஜித்துடன் யாழ் வந்த அவர்கள் தரப்பு எம்.பி. ஒருவர் தகவல் தெரிவித்தார். மலிந்தால் விட யம் சந்தைக்கு வரும். அப்போது மேல் விவரம் தெரிய வரும். பார்ப்போம்.

## மஹிந்தவின் வழி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் தேர் தல் விஞ்ஞாபனம் வெளியிடும் நிகழ்வு நேற்று கொழும்பு – ரத்னதீப நட்சத்திர ஹோட்டலில் இடம்பெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிப திகளான மஹிந்த ராஜபக்ஷ, கோட்டா பய ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ மற்றும் சமல் ராஜபக்ஷ உள்ளிட்ட பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப் பினர்கள் கலந்துகொண்டனர்.

நேற்று காலை 10.30 மணிக்கு சர்வமத வழிபாடுகளுடன் நிகழ்வு ஆரம் பமானது. இதனைத் தொடர்ந்து ஜனாதி பதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தனது கொள்கைத் திட்டத்தை சர்வமதத் தலை வர்களுக்குக் கையளித்தார்.

இந்த நிகழ்வில் நாமல் ராஜபக்ஷ உரையாற்றும்போது மேலும் தெரி வித்கையில்,

"ஐந்து சக்திகளை ஒன்றிணைத்து ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி கொள்கை ரீதியில் மாறுப்பட்ட தரப்பின ருடன் கூட்டணியமைத்ததால் எமது அணியினரை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கிருந்தது. இதனால் தான் பஸில் ராஜபக்ஷ ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை ஸ்தாபித்தார்.

நாட்டின் ஒற்றையாட்சியைப் பாது காக்க நிபந்தனையில்லாமல் போரிட்டவர் களையும், பௌத்த சாசனத்தையும் பாது காக்க வேண்டியது எமது பிரதான கொள் கையாகும். பொருளாதார நெருக்கடிக்கு எம்மால் நிச்சயம் தீர்வு காண முடியும்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் பொறுப்பு எனக்கும், எனது கட்சிக்கும் உண்டு. குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பொறுப்பற்ற வகை யில் நாங்கள் செயற்படவில்லை. 30 வருடகால யுத்தத்தை நாங்களே முடிவுக்கு கொண்டு வந்தோம்.

சூழ்ச்சிகளினால் எம்மையும், எமது அணியையும் வீழ்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போது நாட்டுக்காக சிறந்த தீர்மானங்களை எடுத்தோம். நாட்டை முன்னேற்றும் ஆளுமை மற்றும் திறமை எம்மிடமுள்ளது. எதிர்வரும் 10 ஆண்டுகளில் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியை இரண்டு மடங்காக அதிக ரித்துக் கொள்ள வேண்டும். அதற்கான திட்டங்கள் எம்மிடம் உள்ளன.

நாட்டு மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை டிஜிட்டல் மயப்படுத்தி னால் வரிசை கலாசாரத்தை முழுமையாக முடிவுக்குக் கொண்டு வரலாம்.முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலை மையில் அதற்கான ஆரம்பக்கட்ட நட வடிக்கைகளை முன்னெடுத்தோம். இருப் பினும் துரதிஷ்டவசமாக அவை செயற் படுத்தப்படவில்லை.

எமது அரசில் முதல் ஆறு மாத காலத் துக்குள் சகல அரச கட்டமைப்புக்களும் டிஜிட்டல் மயப்படுத்தப்படும். சர்வதேச அமைப்புக்களின் கொள்கைக்கு அமை யவே வரி கொள்கை அமுல்படுத்தப் படுகிறது. இந்நிலைமை மாற்றம் பெற வேண்டும். மக்களால் தாங்கிக் கொள்ள கூடிய நியாயமான வரி கொள்கை அமுல் படுத்தப்படும்.

நேர் வரிக்கு பதிலாக நேரில் வரி முறைமை அமுல்படுத்தப்படும். அரச நிர்வாகம் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டால் ஊழல் மற்றும் மோசடிகளை இல்லா தொழிக்கலாம். யுத்த காலத்தில் அரசி யல்வாதிகள் யுத்தம் என்று குறிப்பிட் டுக்கொண்டு அரசியல் செய்தார்கள். மஹிந்த ராஜபக்ஷ 3 வருடங்களுக்குள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தி செய்தார்.

தேர்தல் மேடைகளில் ஊழல் ஒழிப்பு என்று தொடர்ச்சியாக எழுப்பப்படும் கோஷத்தை ஆட்சிக்கு வந்து மூன்று ஆண்டுகளில் முடிவுக்குக் கொண்டு வருவோம். மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள் கைகளை நான் கடைப்பிடிப்பேன்." – என்றார்.

# சஜித்தை ஆதரிக்கும் தமிழரசின் முடிவுக்கு தமிழ் மக்கள் உரிய பதிலை வழங்குவார்கள்

## கருணாகரன் எம்.பி. மட்டக்களப்பில் தெரிவிப்பு

(வவுணதீவு எஸ்.சதீஸ்)

இடம் பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் தபால் மூல வாக்களிக்கும் தினங்கள் இந்த வாரத்தில் இருப்பதனால், வடக்கு கிழக்கில் இருக்கும் தபால் மூலம் வாக்களிக்க உள்ள தமிழ் வாக்காளர்கள் எமது சங்கு சின்ன வேட்பாளருக்கு ஆதரவு வழங்க வேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் நேற்றுத் திங்கள்கிழமை அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தார்.



இந்தப் பொது வேட்பாளர் விடயத்தில் சிவில் சமூக அமைப்பினர் நமக்கு ஒரு உத்தரவாதத்ச்சி வழங்கியிருந்தனர். அதாவது தமிழரசுக் கட்சியையும் இந்தக் கட்டமைப்புக்குள் கொண்டு வந்து எமது பொது வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்ற விடயத்தில் தெரிவித்திருந்தனர்.

ஆனால் தமிழரசு கட்சிக்குள்ளேயே இவ்விடயம் சம்பந்தமாக இரு அணியினராக இருந்து இரு வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு இருந்தன்ச். இருப்பினும் தமிழரசு கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு தமது ஆதரவை தெரிவிப்பதாக அறிவித்திருந்தனர்.

இந்த அறிவிப்பானது எமது பொது வேட்பாளர் விடயத்தை பாதிப்படையச் செய்யும். இவ்வாறான இவர்களது செயற்பாடுகளை விளங்கிக் கொண்டு இதற்குரிய முடிவை மக்கள் உரிய காலத்தில் வழங்குவார்கள் என நம்புகின்றேன். – என அவர் தெரிவித்தார்.



# மட்டு.வந்தாறுமூலையில் இடம்பெற்ற விபத்தில் இளைஞரொருவர் மரணம்

(பழுவூரான்)

மட்டக்களப்பு – ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வந்தாறுமூலை பிரதான வீதியில் நேற்றுத் திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் 31 வயதுடைய சந்திவெளிப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

செங்கலடிப் பகுதியில் இருந்து சந்திவெளி நோக்கி அவர் சென்ற வேளையே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் டிராக்டர் ஒன்றுடன் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. டிராக்டர் சாரதி வாகனத்தை நிறுத்தாமல் சென்றுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# இளம் ஊடகவியலாளரான பிரகாஷின் நினைவுதினம்

கொரோனாத் தொற்றுக்குள்ளாகி மறைந்த இளம் ஊடகவியலாளரான ஞானப்பிரகாசம் பிரகாஷின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் யாழில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றைய தினம் திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் நினைவேந்தல் இடம் பெற்றது.

அதன் போது , மறைந்த ஊடகவியலாளரின் உருவப்படத்திற்கு யாழ் ஊடக அமையத்தின் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான கு.செல்வக்குமார் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

ஈகைச்சுடரை யாழ் தினக்குரல் பத்திரிகை ஆசிரியர் த.வினோஜித் ஏற்றிவைத்தார். அதனை தொடர்ந்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கொடிகாமத்தைச் சேர்ந்த பிரகாஷ் தனது ஏழாவது வயதில் தசைத்திறன் குறைபாடு (*Muscular Dystrophy*) நோயினால் பாதிக்கப்பட்டமையால் நடக்க முடியாத நிலை ஏற்பட்டது. அதனால் தரம் ஐந்துடன் தனது பாடசாலை கல்வியை அவர் இடைநிறுத்திக்கொண்டார்.

அந்நிலையிலும் அவற்றை எல்லாம் தாண்டி அவர் ஊடக துறையில் தனக்கொன்று ஒரு இடத்தினை தக்க வைத்திருந்தார். சுயாதீன ஊடகவியலாளராக யாழில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளுக்கு கட்டுரைகள், செய்திகள் எழுதி வந்தமையுடன், உள்நாட்டு, வெளிநாட்டு இணையத்தளங்களும் செய்திகளையும் கட்டுரைகளையும் எழுதி வந்தார். அதேவேளை சில இணையத்தளங்களில் செய்தி பதிவேற்றுனராகவும் கடமையாற்றி வந்தார்.

இந்நிலையில் கடந்த 2021 செப்டம்பர் 2 ஆம் திகதி கொரோனாத் தொற்றுக்குள்ளாகி அவர் உயிரிழந்தார்.



# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான கால அட்டவணை அறிவிக்கப்பட்டது

இந்த வருடம் நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான கால அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் திணைக்களம் இதனை அறிவித்துள்ளது.

இதன்படி பரீட்சையின் இரண்டாம் பாகம் காலை 9.30 மணி முதல் 10.45 மணிவரையிலும், முதலாம் பாகம் காலை 11.15 மணி முதல் 12.15 மணிவரையிலும் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் வருகைப் பதிவேடு சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை பெயர்ப்பட்டியல் கிடைப்பெறாத பாடசாலைகளின் அதிபர்கள் www.doenets.lk அல்லது https://onlineexams.gov.lk/eic என்ற இணையத்தளங்களுக்குச் சென்று உரிய ஆவணங்களைப் பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

அத்துடன் புலமைப்பரிசில் பரீட்சை நாடளாவிய ரீதியில் 2,649 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.



இந்தநிலையில் செப்டம்பர் 15 ஆம் திகதி புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**நமது கருத்து**

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# படைத்தரப்பின் பதற்றம்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் பலருக்கும் ஒரு சிக்கலைக் கிளப்பிவிட்டிருக்கின்றார் இராணுவத்தின் முன்னாள் உயர் அதிகாரியான ஓய்வு பெற்ற ஜெனரல் ஜகத் டயஸ்.

யுத்தத்தில் வென்ற இலங்கை இராணுவத்தின் உறுப்பினர்களுக்கு எதிராக ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஊடாகப் பேராபத்து நெருங்கி வருகின்றது என்று அபாய மணி ஒலித்துள்ள அவர், இந்த நெருக்கடியை - அச்சுறுத்தலை - எதிர்கொள்வது எப்படி என்று தற்போதைய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் தத்தமது நிலைப்பாட்டை வெளிப்படையாகத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் கோரியிருக்கின்றார்.

இவ்விடயத்தில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் நிலைப்பாடுகள், பிரதிபலிப்புகளைக் கவனிக்க முன்னர், ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலின் நடவடிக்கைகளினால் யுத்த வெற்றி வீரர்களான இலங்கை படையினருக்கு பேராபத்து வந்துவிடும் என ஜெனரல் ஜகத் டயஸ் துள்ளிக்குதிப்பது ஏன் என்பதைக் கவனிக்க வேண்டும்.

குற்றமுள்ள மனம்தான் குறுகுறுக்கும். குற்றம் செய்யாவிடில் - தவறிழைக்காவிடில் - யுத்த குற்றங்கள் புரிந்திருக்காவிடில் - மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களை இழைத்திருக்காவிடில் - தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறி இருக்காவிடில் - இலங்கை அரசும், ஜகத் டயஸின் படைத்தரப்பும் கூறுவது போல இலங்கைப் படைகள் முன்னெடுத்தது யுத்தமல்ல, மனிதாபிமானப் பணி என்றால் - அது, பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து தமிழ் மக்களை மீட்டெடுக்கும் நடவடிக்கை என்றால் - மனித உரிமைகள் கவுன்ஸில் வலியுறுத்தும் சர்வதேச விசாரணை பொறிமுறை குறித்து இலங்கை அரசும் அரசுத் தலைவர்களும் படை அதிகாரிகளும் ஏன் பதறி அடித்து அஞ்ச வேண்டும்?

மடியில் கனமிருந்தால்தானே வழியில் பயம்...?

இலங்கை விடயத்தில் பொறுப்புக் கூறல்மற்றும்நல்லிணக்கத்தை அடைவதற்கு தேவையான நிலை மாறுகால மாற்றம் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அறிக்கை பிரஸ்தாபிப்பது ஜெனரல் டயஸ் போன்றோரைக் கிலிக்குள் ஆழ்த்தி இருக்கின்றது என்பது அவர் இப்போது வெளிப்படுத்தியுள்ள கருத்தியலில் இருந்து தெளிவாகின்றது.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் இலங்கை தொடர்பான ஜெனிவா நடவடிக்கைகளைத் தொடர்ந்து கடைபிடிக்க வேண்டியிருக்கும், அது தவிர்க்க முடியாத கட்டாயம் என்று ஜெனிவா அண்மையில் எச்சரித்திருப்பதை ஜனாதிபதி வேட்பாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என கஜபா படைப்பிரிவின் முன்னாள் தளபதி ஜெனரல் டயஸ் கூறியிருக்கின்றார்.

அண்மையில் கொழும்பு பொது நூலகத்தில் யுதுகம சிவில் சமூகக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜெனிவா பற்றிய அபாய எச்சரிக்கையை ஜெனரல் டயஸ் விடுத்திருக்கின்றார்.

போர் குற்றம் இழைத்தவர்களை விசாரித்துத் தண்டிக்க இலங்கை தவறிவிட்டது என்று ஜெனிவாவின் சுருக்க அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட ஜெனரல் ஜகத் டயஸ், பொறுப்புக் கூறலை நிலை நாட்டுவதற்கு சர்வதேச ஆதரவை ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கோரி நிற்கின்றது என்றும் அலறியடித்திருக்கின்றார்.

அதனால், எல்லை கடந்த உலகளாவிய நியாயாதிக்கம், இலக்கு வைக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக - இணங்கக் கூடிய - பிற நடவடிக்கைகளை இலங்கைக்கு எதிராக முன்னெடுக்க ஜெனிவா கோரி இருப்பதாகவும் அவர் அச்சத்துடன் குறிப்பிட்டிருக்கின்றமை கவனிக்கத்தக்கது.



# ஆந்திரா, தெலுங்கானாவில் கடும் மழை 31 பேர் பலி, பல லட்சம் மக்கள் பாதிப்பு

ஆந்திரா, தெலுங்கானா மாநிலங்களில் கனமழை – வெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்துள்ளது.

இரு மாநிலங்களிலும் லட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆந்திரா மற்றும் தெலுங்கானாவில் கடந்த சில நாள்களாக இடைவிடாமல் தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் குடியிருப்புகளில் வெள்ளம் சூழ்ந்து காட்டாற்று வெள்ளம் போல மழைநீர் பாய்ந்தோடுகிறது. ஆந்திராவில் என்டிஆர், கிருஷ்ணா, குண்டூர் உள்ளிட்ட பல மாவட்டங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. கடந்த 3 நாள்களாக ஆந்திராவில் பெய்த வரலாறு காணாத மழை மற்றும் வெள்ளத்தால் கிட்டத்தட்ட 4.5 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பல கிராமங்கள் முற்றிலுமாக சேதமடைந்துள்ளன. பல இடங்களில் தண்டவாளங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதற்கிடையில் ஆந்திரா, தெலுங்கானா முதல்வர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்ட பிரதமர் நரேந்திர மோடி மழை, வெள்ள பாதிப்பு நிலவரங்களைக் கேட்டறிந்ததோடு மத்திய அரசு தேவையான உதவிகளைச் செய்யும் என்று உறுதியளித்தார்.

இரண்டு மாநிலங்களிலும் ரயில் சேவை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கியுள்ளது.

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு நேற்று விஜயவாடாவில் நேரில் சென்று ஆய்வு செய்தார். கடந்த மூன்று நாள்களாக ஆந்திராவில் பெய்த வரலாறு காணாத மழை மற்றும் வெள்ளத்தால் கிட்டத்தட்ட 4.5 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே 31,238 பேர் மீட்கப்பட்டு, 166 நிவாரண முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். ஆந்திராவில் ஆடு, எருமை உள்ளிட்ட 39 கால்நடைகள் உயிரிழந்துள்ள நிலையில், பால்நாடு மாவட்டத்தில் 5,300 கோழிகள் (poultry birds) உயிரிழந்துள்ளன. 38 மீன்பிடி படகுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன எனக் கூறப்படுகிறது.

# மருத்துவமனைகளில் பொலிஸ் மையம்

## தமிழக அரசு அதிரடி உத்தரவு

அனைத்து மருத்துவமனைகளிலும் பொலிஸ் மையத்தினை அமைக்குமாறு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

மேற்குவங்கத்தில் பெண் மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்து கொல்லப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து, நாட்டில் உள்ள மருத்துவமனை மருத்துவக் கல்லூரிகள் பாதுகாப்பை உறுதி செய்ய மாநில அரசுகளுக்கு ஒன்றிய அரசு ஆணை பிறப்பித்தது.

அதன்படி, மருத்துவமனையில் பாதுகாப்பை உறுதிப்படுத்த புதிய திட்டத்தை தமிழக அரசு அமுல்படுத்தியது.

அந்தவகையில் மருத்துவமனை பணியாளர் பாதுகாப்புக்காக ஆலோசனை, பாதுகாப்பு என 2 குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் எனவும், மருத்துவமனை வளாகம் முழுவதும் சிசிடிவி கெமராக்கள் பொருத்தப்பட வேண்டும் எனவும், மருத்துவமனையில் குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே பார்வையாளர்கள் அனுமதி வழங்கப்படவேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.



அத்துடன் மருத்துவமனைகளில் கண்டிப்பாக ஒரு காவல் துறை மையம் அமைக்க வேண்டும் எனவும் மேற்குறிப்பிட்ட உத்தரவுகளை உடனே அமுல்படுத்த வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# சர்வதேச விண்வெளி மையத்தில் இருந்து சுனிதா வில்லியமின்றி வரும் விண்கலன்

சர்வதேச விண்வெளி மையத்தில் இருந்து சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் இல்லாமல் அவர்கள் சென்ற போயிங் ஸ்டார்லைனர் விண்கலன் மட்டும் பூமிக்கு திரும்பும் என நாசா தெரிவித்துள்ளது.

அவர்கள் பயணித்த போயிங் நிறுவனத்தின் ஸ்டார்லைனர் விண்கலனில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப கோளாறு இதற்கு காரணமாக அமைந்துள்ளதுடன் விண்வெளி மையத்தில் சுமார் 90 நாட்களாக உள்ள அவர்களை பூமிக்கு அழைத்து வர நாசா பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட நிலையில் அடுத்த ஆண்டு பிப்ரவரியில் தான் அவர்கள் பூமிக்கு திரும்புவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆளில்லாமல் போயிங் ஸ்டார்லைனர் விண்கலன் சர்வதேச விண்வெளி மையத்தில் இருந்து புறப்பட்டு அது சனிக்கிழமை அன்று தரையிறங்கும் என நாசா தெரிவித்துள்ளது.



# புகலிடக் கோரிக்கையாளர்கள் மீதான வன்முறை பிரித்தானியாவில் அதிகரிப்பு

கடந்த ஜுலை மாதம் இங்கிலாந்தின் சவுத்போட்டில் மூன்று சிறுமிகள் கொடூரமாக ஆயுதம் ஒன்றினால் தாக்கி கொலை செய்யப்பட்டதையடுத்து இங்கிலாந்து மற்றும் வட அயர்லாந்தின் பெல்வாஸ்ட்டில் வன்முறைச் சம்பவங்கள் பாரிய அளவில் இடம்பெற்றுள்ளன.

நடன மற்றும் யோகா நிகழ்வுகளில் கலந்து கொண்ட சிறுமிகளே இவ்வாறு கொல்லப்பட்டனர்.

இது தவிர மேலும் 8 சிறுமிகளும் 2 பொது மக்களும் காயமடைந்தனர்.

இந்த சம்பவத்தை அடுத்து, முஸ்லீம் பள்ளிவாசல்கள், அரசியல் புகலிடம் கோரியவர்கள் தங்கியிருந்த இருப்பிடங்கள் என்பன தாக்குதலுக்கு உள்ளாகின.

கார்கள், கட்டடங்கள் என்பனவற்றிற்கும் தீ வைக்கப்பட்டதுடன், கடைகள் சூறையாடப்பட்டன.

இந்த வன்முறைச் சம்பவங்கள் காரணமாக 100க்கும் அதிகமான பொலிஸார் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவங்கள் தொடர்பில் சமூக ஊடகங்கள் மூலம் மிகைப்படுத்திய தவறான செய்திகள் பரவியதனால் வன்முறைச் சம்பவங்கள் மேலும் அதிகரித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவிர வலதுசாரி தன்மை மற்றும் குடியேற்ற வாசிகளுக்கு எதிரான எதிர்ப்பு உணர்வுகள் பரவியதை அடுத்து நாட்டில் வன்முறைகள் ஏற்பட்டிருந்தது.

இந்தநிலையில், இதற்குக் காரணமானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்படியான செயல்பாடுகளில் ஈடுபட்ட சிறு பராயத்தவர்கள் உட்பட பலருக்கு எதிரான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

அதற்கு அமைய நேற்று மட்டும் மூவருக்குக் கடுமையான தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக பிரித்தானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# பொது வேட்பாளர் அரியம் நேற்று மன்னார்ப் பிரதேசத்தில் பிரசாரம்

## ஆயரிடமும் நேரில் சென்று ஆசி பெற்றார்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளரின் தேர்தல் பிரசார கூட்டம் மன்னாரின் பல பாகங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் நேற்றைய தினம் திங்கட் கிழமை மதியம் மன்னாரிற்கு வந்த வேட்பாளர் பா.அரியநேத்திரன் மன்னார் ஆயர் இல்லத்திற்குச் சென்று மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையைச் சந்தித்து ஆசி பெற்றார்.

முன்னதாக மதியம் 1.30 மணியளவில் மன்னாரிற்கு வருகை தந்த தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் மன்னார் பஜார் பகுதியில் உள்ள தந்தை செல்வாவின் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

அதனைத்தொடர்ந்து மன்னார் நகரில் இருந்து அவர் மங்கள வாத்தியத்துடன் அழைத்துச் செல்லப்பட்டார்.

பின்னர் மன்னார் ஆயர் இல்லத்திற்குச் சென்று மன்னார் மறைமாவட்ட ஆயரிடம் ஆசி பெற்றார்.இதன் போது அருட்தந்தை நேரு அடிகளாரும் கலந்து கொண்டிருந்தார். இன்று மாலை வரை மன்னாரில் தங்கியுள்ள அவர் பல்வேறு இடங்களுக்கும் சென்று தேர்தல் பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட உள்ளார் எனவும் தெரிய வருகிறது.


















# தபால்மூல வாக்களிப்புக்கு சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பிற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என தேர்தல் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

நாளை மாவட்ட தேர்தல் செயலகம், அலுவலகம் மற்றும் பொலிஸ் நிலையங்களில் தபால்மூல வாக்குகளை அளிக்க முடியும் என ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்னாயக்க கூறியுள்ளார்.

தேர்தல் ஆணைக்குழு, பிரதேச செயலகப் பிரிவுகள் உள்ளிட்ட தேர்தல் பணிகளில் ஈடுபடுவோர் முதல் கட்டமாக வாக்களிக்கவுள்ளனர்.

அதனை தொடர்ந்து பொலிஸார் உள்ளிட்ட தெரிவு செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர்களும் தபால்மூலமாக வாக்களிக்கவுள்ளனர்.

04 ஆம், 05 ஆம் மற்றும் 06 ஆம் திகதிகளில் வாக்களிக்க தவறியவர்களுக்கு எதிர்வரும் 11 மற்றும் 12 ஆம் திகதி வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.




# 30 இலட்சம் சிகரெட்டுக்களை அழிக்க நடவடிக்கை

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைப்பற்றப்பட்ட சுமார் 30 இலட்சம் சிகரெட்டுக்களை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இலங்கை சுங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த வருடத்தின் முதல் 6 மாதங்களில் கைப்பற்றப்பட்ட சுமார் ஏழரைக் கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய சிகரெட்டுக்களே இவ்வாறு சுங்கத்தினரின் மேற்பார்வையில் அழிக்கப்படவுள்ளன.

சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட இந்தச் சிகரெட்டுக்கள் ஊடாக சுமார் 48 கோடி ரூபாவுக்கும் அதிகமான வரி ஏய்ப்பு மேற்கொள்ள முயற்சிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 2025 ஆம் ஆண்டிலிருந்து அரச ஊழியர்களுக்கு 24 - 50 சதவீதம் வரையிலான சம்பள அதிகரிப்பு



அரச ஊழியர்களின் சம்பளம் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்ட நிபுணத்துவ குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் 24 - 50 சதவீதம் வரையில் அதிகரிக்கப்படவுள்ளது.

அதன்படி அரச சேவையின் அலுவலக உதவியாளர் தரம் மூன்றிற்கு 5 ஆயிரத்து 450 ரூபாவினாலும், இரண்டாம் தரத்துக்கு 8 ஆயிரத்து 760 ரூபாவினாலும், தரம் ஒன்றுக்கு 10 ஆயிரத்து 950 ரூபாவினாலும் சம்பளம் அதிகரிக்கப்படவிருப்பதோடு, அதன் உயர்தர சேவைகளுக்கு 13 ஆயிரத்து 980 ரூபாவினால் சம்பள அதிகரிப்பு செய்யப்படவுள்ளது.

அதேபோல் சாரதி சேவையின் மூன்றாம் தரத்தின் சம்பளம் 6 ஆயிரத்து 960 ரூபாவினால் அதிகரிக்கப்படும். இரண்டாம் தரத்தின் சம்பளம் 9 ஆயிரத்து 990 ரூபாவினாலும், முதலாம் தரத்திற்கு 13 ஆயிரத்து 20 ரூபாவினாலும், விசேட தரத்துக்கு 16 ஆயிரத்து 340 ரூபாவினாலும் சம்பள அதிகரிப்பு கிடைக்கும்.

மூன்றாம் நிலை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு 8 ஆயிரத்து 340 ரூபா சம்பள உயர்வும், இரண்டாம் தரத்துக்கு 11 ஆயிரத்து 690 ரூபா சம்பள உயர்வும், முதலாம் தரத்துக்கு15 ஆயிரத்து 685 ரூபா சம்பள உயர்வும் கிடைக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், அனைத்து அரச ஊழியர்களுக்கும் வழங்கும் வருடாந்தம் சம்பள உயர்வுத் தொகையை இரட்டிப்பாக் கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், 2025 ஜனவரி 01 முதல் அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள், பல் கலைக்கழகங்கள் மற்றும் பாதுகாப்பு படையினரின் சம்பளத்தை அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



# நெல் உற்பத்தியில் வீழ்ச்சி

## மத்திய வங்கி அறிவிப்பு

கடந்த பெரும்போக பருவத்தில் நெல் உற்பத்தி 2.63 மில்லியன் மெட்ரிக் தொன்களாக பதிவாகியுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இது கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் 2.4 சதவீதம் வீழ்ச்சியாகும்.

அத்துடன், கடந்த மே மாதத்தில் மீன் உற்பத்தியும் 5.3 சதவீதம் குறைவடைந்துள்ளது. சீரற்ற காலநிலை காரணமாக மீன்பிடி நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

இதே காலப்பகுதியில், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், உள்ளூர் சீனி உற்பத்தியும் 33.8 வீதத்தாலும், தேங்காய் உற்பத்தி 0.5 வீதத்தாலும் குறைந்துள்ளது என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது.





# அரச சொத்துக்களை உள்ளடக்கிய முதலீட்டு நிறுவனம் நிறுவப்படும்!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

“மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் அரச சொத்துக்களை உள்ளடக்கி புதிய முதலீட்டு நிறுவனம் ஒன்று எதிர்காலத்தில் உருவாக்கப்படும். அதற்காக புதிய சட்டங்கள் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும். அதன் ஊடாக சொத்துக்களை உருவாக்கும் புதிய முதலீடுகளை மேற்கொள்ளவும் முறையான ஓய்வூதிய திட்டமிடல் முறையை உருவாக்க முடியும்,”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சனச அமைப்பின் ஊடாக முதியோர்களுக்கான புதிய ஓய்வூதியக் காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்வு நேற்று முற்பகல் கொழும்பில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“1977 இல் பதவியேற்ற ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இந்த நாட்டின் பொருளாதாரத்தை திறந்து விட்டது. அதன்படி, புதிய நிறுவனங்கள் மற்றும் புதிய வணிகங்களை உருவாக்க ஒவ்வொரு குழுவும் முன்வந்தன. அன்றைய தினம் சனச இயக்கத்தை ஆரம்பிக்க பி.ஏ.கிரிவந்தெனிய முன்வந்தார். அதன்படி, இந்தத் திட்டத்தை சட்டபூர்வமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த நாட்டின் அனைத்து மக்களுக்கும் உற்பத்தி மற்றும் விநியோகம் பிரிக்கப்பட வேண்டும் என்ற பிரேரணை 1962 இல் டட்லி சேனாநாயக்க மற்றும் ஜே. ஆர். ஜயவர்தன ஆகியோரால் கொண்டு வரப்பட்டன . உரிமைகளைப் பகிர்ந்தளிப்பதற்கான முன்மொழிவாக இது அரசியலமைப்பிலும் சேர்க்கப்பட்டுள்ளது. அதன்படி, சனச இயக்கங்கள் போன்ற அமைப்புகள் ஊக்குவிக்கப்பட்டன. இது இலங்கையின் பொருளாதாரத்திற்கும் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளது.

20 ஆம் நூற்றாண்டை விட 21 ஆம் நூற்றாண்டில் மாற்றம் ஏற்பட்டது. சிறு தொழில்கள் உருவாகி பொருளாதாரம் விரிவடைந்தது. முச்சக்கரவண்டித் தொழில் மற்றும் சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய சிறு வணிகம் வேகமாக முன்னேறியது. ஆனால் 2022 இல் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, நாடு ஸ்திரமற்ற நிலையில் இருந்த நேரத்தில் நான் நாட்டைப் பொறுப்பேற்றேன். அன்று மக்கள் பொறுமை காக்கவில்லை என்றால் இன்று இந்த நாட்டில் பெரும் அராஜகக நிலை உருவாகியிருக்கும்.

மக்கள் வீதியில் இருந்து கொண்டு நாட்டை நிர்வகிக்க முயன்றால் இன்று பங்களாதே/க்கு நேர்ந்த கதி இலங்கைக்கும் ஏற்பட்டிருக்கும். நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதில் கடினமான மற்றும் பிரபலமற்ற முடிவுகளை எடுக்க நேரிட்டது. சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து இந்நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. வாகனம், வீடு, நவீன மின்சாதனங்கள் வாங்குவது மக்களின் கனவாக இருந்தது. நாம் கடினமான காலத்தை கடந்துவிட்டோம். பொருளாதாரம் தற்போது ஸ்தீர நிலையை அடைந்துள்ளதால், மக்களின் கொள்வனவு செய்யும்

தொடர்ச்சி▼









# அரச சொத்துக்களை உள்ளடக்கிய முதலீட்டு நிறுவனம் நிறுவப்படும்!

**தொடர்ச்சி▲**

சக்தியும் அதிகரித்துள்ளது.

மக்களுக்கு காணி உரித்து வழங்கும் வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி இந்நாட்டு மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் முழு உரிமையுள்ள காணி உறுதிப் பத்திரங்களை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, இருபது இலட்சம் காணி உறுதிப்பத்திரங்கள் இதன் மூலம் வழங்கப்படுகின்றன.

கொழும்பு நகர அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்கு அவர்களின் வீட்டின் உரிமைகளை வழங்கும் திட்டத்தையும் ஆரம்பித்தோம். மலையக மக்களுக்கான தோட்ட கிராமங்களை உருவாக்கி ஒரு குடும்பத்திற்கு ஏழு பேர்சஸ் காணியை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த பொறிமுறையின் படி மக்களுக்கு "உரிமைகள்" வழங்கும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது.

மேலும், குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு இலகு வட்டியில் வீட்டுக்கடன் வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இதுவரை, ஊழியர் சேம நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவற்றின் நிதி, பிணைமுறிப் பத்திரங்களை வாங்க பயன்படுத்தப்பட்டது. இப்போது நாம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தின்படி அரச செலவுகள் குறைக்கப்பட்டுள்ளன.

அரச வருமானத்தை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. வருமானம் அதிகரிக்கும் போது, பிணைமுறிப் பத்திரங்களை வாங்க ஊழியர் சேம நிதியத்தின் பணம் தேவையில்லை. அந்த நிதியை முதலீட்டுக்கு பயன்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டு வருகிறது. இது குறித்து தொழிற்சங்கங்கள் மற்றும் முதலாளிகளுடன் கலந்துரையாட எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்காலத்தில் அரசாங்க சொத்துக்களிலிருந்து முதலீட்டு நிறுவனம் ஒன்றை நிறுவவும் எதிர்பார்க்கப்படுகிறது. நோர்வே, கட்டார், சிங்கப்பூர் போன்ற நாடுகளும் அரச வருமானத்தின் மூலம் கிடைக்கும் இலாபத்தை நலன்புரிப் பணிகளுக்காகப் பயன்படுத்த இவ்வாறானதொரு நிறுவனத்தை உருவாக்கியுள்ளன. அதன் மூலம் மக்களின் "உரிமை" பாதுகாக்கப்படும்.

இவ்வாறானதொரு சமூக முதலீட்டுத் திட்டத்தை இந்த சனச இயக்கமும் செய்து வருகின்றது என்பதைக் கூற வேண்டும். இந்த வகையான சமூக முதலீட்டு முறை பல்வேறு சேவை கூட்டுறவு சங்கங்களால் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு புதிய சட்டங்கள் கொண்டு வருவது அவசியமாக உள்ளதுடன், டென்மார்க், ஸ்வீடன் ஆகிய நாடுகளில் நடைமுறையில் உள்ள சட்டங்களைப் ஆராய்ந்து அந்த சட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். இதன் மூலம் முதலீடுகள் அல்லது ஓய்வூதிய திட்டங்களையும் முன்னெடுக்கலாம்.

புதிய டிஜிட்டல் பொருளாதாரத்தில் பிரவேசிக்கும் இளம் தொழில்முனைவோருக்கு ஒரு தனியான சனச இயக்கத்தை உருவாக்க வேண்டும். விவசாயத் துறையையும், மீன்பிடித் துறையையும் நவீனமயமாக்குவதன் மூலம் பொருளாதாரத்தை திறம்பட மேம்படுத்த முடியும். அதற்கெல்லாம் முன்மாதிரியாக சனச கட்டமைப்பு இருந்தது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சனச சங்கங்கள் மழைக்குப் பிடிக்கும் குடையைப் போன்றது. தலைக்கு மேல் உள்ள கூரை போன்றது. இதன் செயற்பாடுகளுக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்க எதிர்பார்க்கிறேன்." – என்றார்.














# மீளவும் ராஜபக்ஷ குடும்ப ஆட்சிக்கு மக்கள் ஆணை வழங்கவே கூடாது!

## பரப்புரைக் கூட்டத்தில் அநுர வேண்டுகோள்

“ராஜபக்ஷவினர் குடும்ப ஆட்சியையே முன்னெடுத்தனர். அந்தக் குடும்ப ஆட்சி மீண்டும் வர மக்கள் ஆணை வழங்கக்கூடாது.”

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். ரிக்கிலகஸ்கட பகுதியில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற் றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தார். தற்போது அவரது புதல்வர் நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

79 வயதான மஹிந்த ராஜபக்ஷ தமது மகனுக்காக மேடையேறுகின்றார். கடும் கஷ்டத்துடன் அவர் மேடைகளில் ஏறுகின்றார். நடக்கக் கஷ்டப்படுகின்றார்.

இவ்வளவு கஷ்டப்பட்டு மேடைகளில் ஏறுவதற்கான காரணம் பொதுமக்களின் நலன் கருதியா? இல்லை. தமது பிள்ளையின் வெற்றிக்காகவே. எனவே, ராஜபக்ஷ குடும்ப ஆட்சி மீண்டும் வர மக் கள் ஆணை வழங்கக்கூடாது.”

– என்றார்.











தொடர்ச்சி▼

# இன்றைய ராசி பலன்கள் - 03.09.2024




நீங்கள் எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். வெளிப்படையாக இருக்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இதனால் உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

பணியிடத்தில் சில விரும்பத்தகாத சூழ்நிலையை நீங்கள் சந்திக்க நேரலாம். உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற சிறப்பாக திட்டமிட வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையுடன் பேசுவதை தவிர்த்து அமைதியாக இருப்பதன் மூலம் இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்கிக் கொள்ளலாம்.பேசுவதனால் தவறான புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று ஏற்படும் செலவுகள் காரணமாக கவலை ஏற்படும்.சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

இன்று கால் வலி மற்றும் வயிறு உபாதை ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். இன்று திறம்பட செயலாற்றுவீர்கள். உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்காலத்துக்கு திட்டமிடுவீர்கள்.

பணியிடத்தில் நற்செய்தி காத்திருக்கின்றது. உங்கள் திறமைகளை நிரூபிக்க நல்ல வாய்ப்பு உள்ளது. உங்கள் திறமைகளை மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பேசுவீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே இனிமையான தருணங்கள் ஏற்படும். உங்கள் துணையுடன் தரமான நேரத்தை பகிர்ந்து கொள்வீர்கள்.இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும். இன்று சேமிப்பு பழக்கத்தை மேற்கொள்ளும் நிலையில் காணப்படுவீர்கள்.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. எதிர்மறை விளைவுகளை தடுக்க நீங்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். இன்று கவனமாக திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

இன்று உங்கள் பணிகளைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே கவனமாக பணியாற்ற வேண்டும்.

உணர்ச்சி வசப்படுவதனால் உங்கள் துணையுடனான உறவின் இனிமை பாதிக்கும். உங்கள் துணையுடன் நேர்மையாக மனம் திறந்து உரையாடுங்கள்.

இன்று பண இழப்பிற்கு வாய்ப்புள்ளது. எனவே பணத்தை கையாளும்போது கவனமாக இருக்க வேண்டும்.




உங்கள் இலக்குகளை அடைவதில் தாமதங்கள் காணப்படும். பொறுமையுடன் அணுக வேண்டும். அதற்கேற்றபடி திட்டமிட வேண்டும். வழிபாடு மற்றும் மந்திரங்கள் உங்கள் மனதிற்கு ஆறுதல் அளிக்கும்.

உங்கள் பணிகளைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். பணியிடத்தில் சக பணியாளர்களுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் துணையின் அன்பும் மதிப்பும் பெற நீங்கள் பொறுமை காக்க வேண்டும். உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உறவு பாதிக்கும். எனவே அதனை தவிர்க்க வேண்டும்.




நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள். இதனால் எளிதாக வெற்றி கிடைக்கும். பயனுள்ள முடிவுகள் மூலம் நல்ல பலன் கிடைக்கும்.

பணியில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். நீங்கள் பணிகளை உற்சாகத்துடன் எளிதாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள முயல்வீர்கள். இந்தப் போக்கு நல்லுறவை வலுப்படுத்தும்.

இன்று பணப்புழக்கம் சரளமாக இருக்கும். உங்கள் கடின உழைப்பிற்கான ஊதியம் கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று எதிர்பார்க்கும் பலன்கள் கிடைக்காது. பாதுகாப்பின்மை உணர்வு உங்களிடம் காணப்படும். எந்த விஷயத்தையும் எளிதாக எடுத்துக் கொள்வது சிறந்தது.

பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். கவனமுடன் பணியாற்றினால் பணியில் ஆர்வம் வளரும்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொண்டு உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இது உறவுக்கு உகந்ததல்ல.

இன்று கணிசமான தொகை பராமரிக்க இயலாது. சம்பாதிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.உங்கள்




இன்று நல்ல தரமான வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் காண வேண்டும் என்ற உங்களின் விருப்பம் காரணமாக அதிகமான சிந்தனை காணப்படும். அமைதியாக உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் சக பணியாளர்களுடன் பிரச்சினை வராமல் இருக்க நல்லுறவு கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடனான பிரச்சினை என்னவென்று தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் அமைதியுடனும் கட்டுப்பாடான அணுகுமுறையுடனும் இருக்க வேண்டியது அவசியம்.

அதிக பணம் சம்பாதிப்பது இன்று சிறிது கடினம். நல்ல பணப்புழக்கததுக்கான அமைப்பு இருக்காது.

மன உளைச்சல் காரணமாக கால் வலி ஏற்படலாம். தியானம் மேற்கொள்வது சிறந்தது.




இன்று உங்களுக்கு வெற்றிகரமான நாள். நீங்கள் மகிழ்ச்சியுடன் உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். உங்களிடம் அதிக ஆற்றலும் விழிப்புணர்வும் காணப்படும். உங்கள் வளர்ச்சியில் உங்களுக்கு மன நிறைவு காணப்படும்.

உங்கள் பணியில் முன்னேற்றகரமான பலன்கள் இருக்கும். அனைத்துப் பணிகளையும் தன்னிச்சையாக மேற்கொள்வீர்கள்.

நீங்கள் உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக பணம் காணப்படும். உங்கள் வங்கியில் அதிக பணம் பராமரிப்பீர்கள்.இன்று நீங்கள் சிறப்பான ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.09.2024

## தனுசு

இன்று நம்பிக்கை நிறைந்திருக்கும் சூழல் காணப்படும்.உங்கள் இலக்கு களை அடைவதற்கான தைரியமும் உறுதியும் உங்களிடம் காணப்படும். மொத்தத்தில் வளர்ச்சி காணப்படும். உங்களிடம் தன்னம்பிக்கை நிறைந்திருக்கும்.

நீங்கள் மனதளவில் வலுவுடனும் புத்துணர்ச்சியுடனும் காணப்படுவீர்கள். பணியில் வெற்றி காண்பீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் சிறந்த தகவல் தொடர்பு கொண்டிருப்பீர்கள். உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள்.

இன்று உங்களிடம் பணம் அதிகமாக காணப்படும். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

இன்று தேக ஆரோக்கியம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். நீங்கள் மன உறுதியுடன் காணப்படுவீர்கள்.

## மகரம்

ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் நீங்கள் உயர்நிலை அடைவீர்கள் மற்றும் ஆறுதல் பெறுவீர்கள். அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் கவனமாகப் பணியாற்ற வேண்டும். தவறுகள் செய்து பின் அவற்றை சரி செய்வதை விட முதலிலேயே தவறுகள் நேரா வண்ணம் பார்த்துக் கொள்வது சிறந்தது.

உங்கள் துணையிடம் உணர்வுப் பூர்வமாக நடந்து கொள்வீர்கள். இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி மகிழ்சிகரமாக இருக்காது. பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. பண விஷயங்களை கையாளும்போது கவனமாக பாதுகாப்புடன் கையாளவும்.

## கும்பம்

இன்று வளமான நாளாக இருக்கும். இன்று நீங்கள் தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். முக்கிய இலக்குகளை அடைவீர்கள். உங்களிடம் இன்று மன நிறைவு காணப்படும்.

பணியில் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். உங்கள் செயல்திறன் மூலம் உங்களுக்குள் மறைந்திருக்கும் திறமை வெளிப்படும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக பண வரவு கண்டு மகிழ்வீர்கள். எதிர்பாராத வகையிலிருந்து பண வரவு கிடைக்க வாய்ப்புள்ளது.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.

## மீனம்

எதிர்மறையான விளைவுகளை தவிர்க்க அறிவார்ந்த அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். அமைதியின்மையை சமாளிக்க வேண்டும். உங்கள் அணுகுமுறையில் பொறுமை அவசியம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் நேராமல் இருக்க கவனமாக பணியாற்ற வேண்டும். உங்கள் மேலதிகாரிகளுடன் சில விரும்பத் தகாத சூழ்நிலையை சந்திக்க நேரலாம்.

உங்கள் குடும்பத்தில் எழும் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று பண வரவிற்கான அதிர்ஷ்டம் குறைவு. நிதியில் ஸ்திரத்தன்மை காண கையிலுள்ள பணத்தை சேமிக்க வேண்டும்.ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கால் வலி மற்றும் விறைப்புத் தன்மை போன்ற பாதிப்பு காணப்படும்.

